மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: என்னிடமுள்ள தகவல் 29—5—1973 தேதி மாற்று யோசனை தருமாறு தலைமைச் செயலாளர் எழுதியதாகத் தகவல் இருக்கிறது. மேற்கொண்டு தகவல் இல்லை. உறுப்பினர் அவர்கள் அப்படி அவர்களுக்கு எழுதியிருந்தால் அது பரிசிலனையில் இருக்கும். அது முடிந்து அரசாங்கத்திற்கு வந்த பிறகு அரசாங்கம் பரிசீலித்து முடிவு எடுக்கும்.

நசுவினி ஆற்றின் குறுக்கே அணை

* 547 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள நசுவினி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இத்திட்ட மதிப்பீட்டிற்கு அரசினரால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு தலைமைப் பொறியாளரால் தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் முடிவு செய்தபின் இத்திட்ட வேலைகள் துவங்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த நசுவினி ஆற்றுத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் மதிப்பீடு போடப்பட்டுள்ளது? அதனால் எவ்வளவு ஏக்கர் பாசன வசதி கிடைக்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இத் திட்டத்திற்கு 20 லட்சம் ரூபாய் செலவாகும். இதனால் 3,551 ஏக்கர் நிலப்பாசன பலன் அடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமராவதி ஆற்றிலிருந்து பிரியும் கால்வாய்கள்

* 548 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில், அமராவதி ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் கால்வாய்களைச் சீரமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1973 டிசம்பர் 1]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : எந்தெந்த வாய்க்கால்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன? போடப்பட்டுள்ள மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசு சிறப்பு சிறிய நீர்ப் பாசனத் திட்டத்தின்கீழ் ரூ. 13,12,850-க்கு அங்கிகாரம் அளிக்கப் பட்டிருக்கிறது. 11 கால்வாய்களில் 1969-ல் 7 கால்வாய்களும், 71-ல் மீதமுள்ள 4 கால்வாய்களிலும் வேலை துவங்கப்பட்டுவிட்டது. அந்த 7 கால்வாய்களில் 75 சதவிகிதம் வேலை முடிந்துவிட்டது. மீதம் இருப்பதில் 45 சதவிகிதம் நடந்திருக்கிறது. தாமதத்திற்குக் காரணம் ஆற்றில் தண்ணீர் விடுகிற வேலை செய்யும் நாட்கள் குறைவான நாட்களாகும். அதனுல் வேலை தாமதப்பட்டிருக்கிறது. இருந்தாலும் 1975-க்குள்ளாக இவற்றை முடிக்கவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அமராவதி ஆற்றின் கிளையில் ஏராளமான கால்வாய்கள் இருக்கின்றன. அதில் 11 கால்வாய்களில் வேலை முடிந்துள்ளதா? முடிய இருக்கிற கால்வாய்கள் எவ்வளவு? என்ற விவரங்களைக் கேட்டேன். அதற்குப் பதில் இல்லை. அது பற்றிய விவரங்களை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 11 கால்வாய்கள் உள்ளன என்று தகவல் தெரிவித்தேன். ஏழு கால்வாய்களில் வேலை 69-ல் துவங்கப்பட்டது என்று தெரிவித்தேன். நான்கு கால்வாய்களில் வேலை 71-ல் துவங்கப்பட்டது என்று தெரிவித்தேன். பதினென்றிலும் வேலை துவங்கப்பட்டதாகத் தகவல் இருக்கிறது. பெயர்கள் வேண்டுமானுல் தனிக் கேள்வி வேண்டும். அதுபற்றி என்னிடம் இப்போது தகவல் இல்லை.

நங்கனி ஆற்றின் குறுக்கே பாலம்

*** 549 வினு—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி--கரூர் நெடுஞ்சாலையில் நங்கனி ஆற்றின் மீது தற்போது அமைந்துள்ள படுக்கை பாலத்திற்கு **(cause way)**